செப்டம்பர் 29, 2023

# பிராம்ப்டன் நகர நிர்வாகம் விலங்குகளுக்கு உரிமம் வழங்குவதை மேம்படுத்துகிறது

பிராம்ப்டன், ON –நவம்பர் 1 ஆம் தேதி துவங்கி, பிராம்ப்டன் குடியிருப்பாளர்கள் தங்கள் செல்லப்பிராணிகளைப் பாதுகாப்பாக வைத்திருக்க உதவும் வகையில், ஒரு வருடம் அல்லது இரண்டு வருடங்களுக்கான நாய் மற்றும் பூனை வளர்க்கும் உரிமங்களை வாங்கலாம். பிராம்ப்டன் நகரம் செல்லப்பிராணிகளுக்கு  உரிமம் வழங்கும் தனது முறையை மேம்படுத்தி, காலண்டர் ஆண்டு காலாவதியாவது என்பதை, உரிமம் வாங்கிய நாளிலிருந்து 365 அல்லது 730 நாட்களுக்கு என மாற்றியுள்ளது.

**புதிய ஸ்மார்ட் செல்லப்பிராணி பெயரட்டைகள்**

செல்லப்பிராணிகளுக்கான உரிமத்தை வாங்கும் குடியிருப்பாளர்கள் இப்போது "ஸ்மார்ட்" செல்லப்பிராணி பெயரட்டைகளைப் பெறுவார்கள். ஒவ்வொரு உரிமையாளரும் ஒரு செல்லப் பிராணிக்கு ஒன்று என பெயரட்டைகளைப் பெறுவார்கள். செல்லப்பிராணிகள் தொலைந்து போனால், விலங்கு சேவைகள் அவற்றை விரைவாக அவர்களது குடும்பத்திடம் கொண்டு சேர்க்க முடியும் என்பதை உறுதிப்படுத்த செல்லப்பிராணி பெயரட்டைகள் உதவுகின்றன. ஒரு வருடத்திற்குள் பெயரட்டைகள் தொலைந்துபோனால், $5 கட்டணத்திற்கு வேறொன்று பெறலாம். ஒரு வருடம் கழிந்த பிறகு தொலைந்த அல்லது சேதமடைந்த பெயரட்டைகள் இலவசமாக மாற்றித் தரப்படும். புதிய ஸ்மார்ட் டேக் அமைப்பில், தொலைந்துபோன செல்லப்பிராணிகளை அவற்றின் உரிமையாளர்களுடன் மீண்டும் கொண்டு சேர்க்க உதவுவது மட்டுமல்லாமல், செல்லப்பிராணிகளுக்கு இது மிகவும் நிலைத்து நிற்கவல்ல அணுகுமுறையாகும்; ஒவ்வொரு ஆண்டிலும் பயன்படுத்தப்பட்ட பெயரட்டைகள் குப்பைக்கு சென்று சேராமல் இருப்பதை இது உறுதி செய்கிறது.

உங்கள் செல்லப்பிராணிக்கு உரிமம் வாங்கிவிடுவது முக்கியமாகும். தங்கள் செல்லப்பிராணி தொலைந்துபோகும் என்று யாரும் எதிர்பார்ப்பதில்லை; ஆனாலும் விபத்துகள் நடக்கின்றன, மேலும் தொலைந்துபோன செல்லப்பிராணிகள் பாதுகாப்பாக வீட்டிற்கு வருவதை உறுதிசெய்ய உரிமம் வாங்கிவிடுவதே சிறந்த வழியாகும்.

முனிசிபல் சட்டங்களின்படி, பிராம்ப்டனில் உள்ள அனைத்து நாய்களுக்கும் பூனைகளுக்கும் நகர நிர்வாகத்திடம் உரிமம் பெற்றிருக்க வேண்டும். உரிமங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட பணம் ஒவ்வொரு நாளும் நகரத்தின் விலங்குகள் காப்பகத்திற்கு கொண்டுவரப்படும் விலங்குகளைப் பராமரிப்பதற்குத்தான் திரும்பச் செல்கிறது.

குடியிருப்புவாசிகள் தங்கள் செல்லப்பிராணிகளுக்கான உரிமத்தினை ஆன்லைனில், நேரடியாக, தொலைபேசி அல்லது மின்னஞ்சல் வழியாகப் பெறலாம்.

மேலும் அறிய: www.brampton.ca/animalservices

**கூடுதல் லின்குகள் மற்றும் ஆதாரவளங்கள்**

- பிராம்ப்டன் விலங்குகளுக்கான சேவைகள் (Brampton Animal Services )– உங்கள் செல்லப்பிராணிக்கான உரிமம் பெறுதல்
- பிராம்ப்டன் விலங்குகளுக்கான சேவைகள் (Brampton Animal Services ) – உங்கள் செல்லப்பிராணிக்கு ஆன்லைனில் உரிமம் பெறவும்
- பிராம்ப்டன் விலங்குகளுக்கான சேவைகள் (Brampton Animal Services )- உங்கள் செல்லப்பிராணிக்கு உரிம் பெறுங்கள் – அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

-30-

**ஊடக தொடர்பு**
பிராம்ப்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca